தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 15-6-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**புதுப்பொலிவு பெற்ற வேளாண் பல்கலைக்கழக சிறுவர் பூங்கா**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 1908-ஆம் ஆண்டில் தாவரவியல் பூங்கா நிறுவப்பட்டது. இப்பூங்காவின் மொத்த பரப்பளவு 47.5 ஏக்கர்கள். மேலும் சுமார் 70 தாவர பேரினங்களைச் சேர்ந்த 800 தாவர சிற்றினங்கள் பூங்காவில் பராமரிக்கப்படுகின்றன.

தற்சமயம் மலரியல் மற்றும் நில எழிலூட்டும் துறையின் கீழ் செயல்படும் இப்பூங்காவினைக் காண தாவரவியல் வல்லுநர்கள், உழவர்கள், ஆராய்ச்சி மாணவர்கள், பள்ளிக்குழந்தைகள் மற்றும் அழகுத் தோட்டக்கலை ஆர்வலர்கள் என ஆண்டு தோறும் சுமார் ஒரு இலட்சம் பேர் வந்து செல்கின்றனர்.

கோயம்புத்தூர் மாநகர மக்களின் ஓய்வு நேரத்தைப் பயனுள்ளதாக்கும் பணியைச் செவ்வனே செய்து வரும் தாவரவியல் பூங்காவில் சிறுவர் பூங்கா ஒன்றும் பராமரிக்கப்பட்டு வருகிறது. மிகவும் பழமையான சிறுவர் பூங்காவில் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள விளையாட்டுக் கருவிகளுடன் தற்பொழுது 18 புதிய விளையாட்டுக் கருவிகள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் அவர்களின் வழிகாட்டுதலின்படி நிறுவப்பட்டு புதுப்பொலிவூட்டப்பட்டுள்ளது.

அவற்றின் விவரம் வருமாறு.

| | |
|---|---|
| 1. | ஆறு இருக்கையுடன் கூடிய மெர்ரி கோ சுழல் ஊசல் (Six Seater Merry Go Round) |
| 2. | 8' சாய் தட்டுடன் கூடிய ஏணி (8' FRP Slide & Ladder) |
| 3. | 8' சுழல் தட்டுடன் கூடிய ஏணி (8' FRP Spiral Slide & Ladder) |
| 4. | 10' மடிப்புத் தட்டுடன் கூடிய ஏணி (10' Roller Slide & Ladder) |
| 5. | மூன்றடுக்கு சுழல் ஊஞ்சல் (ARC Swing 3 Tier) |
| 6. | சுழல் நடைமேடை (Revolving Platform) |
| 7. | நிலைநிறுத்தப்பட்ட ஏறி இறங்கும் படகு (Rocking Boat with permanent fixing provision) |
| 8. | வண்ணத்துப்பூச்சி ஊஞ்சல் (Butterfly Swing) |
| 9. | அடிப்பகுதி நகரும் வளையமிடப்பட்ட தொங்கும்பார் கம்பி (Adjustable horizontal bar with rings & bar) |
| 10. | இருபக்க தட்டு கொண்ட ஏறி இறங்கும் கருவி (Dual Slide FRP with Platform Roof top and Climber) |
| 11. | சூரிய மறைவு வடிவ ஏறி இறங்கும் கருவி (Sunset Climber) |
| 12. | பாம்பு வடிவ ஏறி இறங்கும் கருவி (Snake Climber) |
| 13. | ஏபிசிடி வடிவ ஏறி இறங்கும் கருவி (ABCD Climber) |
| 14. | நடுத்தர அளவு அமர்வுப் பலகைகள் (Park Bench M.S) |
| 15. | கூடைப் பந்து கம்பம் (Basket Ball post) |
| 16. | ஏறி இறங்கும் வாத்து (Spring Duck) |
| 17. | வட்ட வடிவ ஊஞ்சல் (Circular Swing) |
| 18. | குரங்கு மற்றும் முயல் வடிவக் குப்பைக் கூடைகள் (Monkey & Rabbit Dustbins) |

பொலிவுபடுத்தப்பட்டுள்ள சிறுவர் பூங்காவினை கோயம்புத்தூர் மாநகர மேயர் இன்று (15.06.2016) காலை திறந்து வைத்தார். இச்சிறுவர் பூங்காவிற்குத் தேவைப்படும் கழிப்பறை வசதிகளை மாநகராட்சி மேற்கொள்ளும் என மேயர் உறுதியளித்துள்ளார். இச்சிறுவர் பூங்கா கோவை மாநகர குழந்தைகளுக்கு மன மகிழ்ச்சியையும் உடற்பயிற்சியையும் அளித்து அவர்களின் அறிவாற்றலை மேம்படுத்துவதற்குத் துணை புரியும்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்